

# SIVAPURANAM MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 5. திருச்சதகம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

பத்தி வைராக்கிய விசித்திரம்

(5) கைம்மாறு கொடுத்தல்

(கலி விருத்தம்)



# திருச்சிற்றம்பலம்



இருகை யானையை ஒத்திருந்து என்உளக்
கருவை யான்கண்டிலேன் கண்டது எவ்வமே
வருக என்று பணித்தனை வான் உளோர்க்கு
ஒருவனே கிற்றிலேன் கிற்பன் உண்ணவே.





உண்டுஓர் ஒண்பொருள் என்று உணர்வார்க்கு எலாம்
பெண்டிர் ஆண்அலி என்றுஅறி ஒண்கிலை
தொண்டனேற்கு உள்ளவா வந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலேன் என்னகண் மாயமே

42





மேலை வானவரும் அறியாதது ஓர்
கோலமே எனை ஆட்கொண்ட கூத்தனே
ஞாலமே விசும்பே இவை வந்துபோம்
காலமே உனை என்றுகொல் காண்பதே.





காணலாம் பரமேகட்கு இறந்தது ஓர்
வாண்நிலாப் பொருளே இங்குஓர் பார்ப்புஎனப்
பாணனேன் படிற்றுஆக்கையை விட்டுஉனைப்
பூணுமாறு அறியேன் புலன் போற்றியே.





போற்றி என்றும் புரண்டும் புகழ்ந்தும்நின்று
ஆற்றல் மிக்கஅன்பால் அழைக் கின்றிலேன்
ஏற்று வந்துஎதிர் தாமரைத் தாள்உறும்
கூற்றம் அன்னதுஓர் கொள்கைஎன் கொள்கையே





கொள்ளுங் கில்எனை அன்பரின் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அறாமலர்க் கொன்றையான்
நள்ளுங் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே





எந்தையாய் எம்பிரான் மற்றும் யாவர்க்குந்
தந்தை தாய் தம்பிரான்தனக்கு அஃதிலான்
முந்தி என்னுள் புகுந்தனன் யாவருஞ்
சிந்தை யாலும் அறிவுஅருஞ் செல்வனே

47





செல்வம் நல்குரவு இன்றி விண்ணோர்புழுப்
புல்வரம்பு இன்றி யார்க்கும் அரும்பொருள்
எல்லை இல்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வகை மனத்தேன் பட்ட கட்டமே

48





கட்டு அறுத்து எனைஆண்டு கண்ணாரநீறு
இட்ட அன்பரொடு யாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடு இரண்டும் அறியேனையே

49





அறிவனே அமுதே அடி நாயினேன்
அறிவனாகக் கொண்டோ எனை ஆண்டது
அறிவிலாமை அன்றே கண்டது ஆண்டநாள்
அறிவனோ அல்லனோ அருள் ஈசனே



ஸ்ரீ மாணிக்கவாசகர்